3rd March 1965]

திரு. கே. ஏ. மதியழகன்: இந்தப் படகு விபத்தில் பத்திரிகையில் வந்த எண்ணிக்கைக்கும் சர்க்கார் தந்த தகவலுக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆற்றில் மூழ்கிப்போனவர்களின் பல ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகளை போலீசாரே எடுத்துக் கொண்டார்கள் என்று செய்திகள் வந்திருக்கின்றன. அவைகளை யார் யாருக்குத்திருப்பிக் கொடுக்கவேண்டும், அவைகளின் மதிப்பு என்ன என்பதைத் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பத்திரிகை செய்திக்கு அரசாங்கம் பொறுப்பு அல்ல. என்னிடத்திலுள்ள விவரங்களைத் தான் சொன்னேன். மேலும் விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. சா. கணேசன்: இது படகு விபத்தா, பரிசல் விபத்தா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது கன்ட்ரி போட் விபத்து.

திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது ஓவர்லோடிங்கையும், ஓவர் ஸ்பீடிங்கையும் தவிர்ப்பதற்கு அடிக்கடி செக் செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டுவருகிறது என்று அறியவிரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மோட்டார்கார் ஓவர் ஸ்பீடிங்கையே தடுப்பதற்கு முடிவதில்லை. நாட்டுப்படகுகளாக இருந்தபோதும் ஓவர் ஸ்பீடிங் இருந்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும் என்னென்ன செய்யலாம் என்பதை கனம் அங்கத்தினர் சொன்னால் அதை கவனிக்கலாம்.

திரு. ஜே. மாதா கவுடர்: சாதாரணமாக மக்கள் அதிகமாக இருக்கும் இடத்தில் மோட்டார் போட்டை உபயோகப்படுத்த அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மோட்டார் போட்டுகள் ஓரளவுக்கு இருக்கின்றன. நாட்டுப்படகுகளே கூடாது என்று சொல்வதற்கு இல்லை. அதுவும் அந்த இடத்தில் ஒரு மைல் அகலம் தான் இருக்கும் படகுகள் இக்கரைக்கும் அக்கரைக்கும் போய்க் கொண்டிருக்கிறது.

சோழமண்டலக் கடலுக்கடியில் ஆராய்ச்சி

*135. கேள்வி.—**திரு. மு. கருணாநிதி:** } கனம் கைத்தொழில்
திரு. கே. ஏ. மதியழகன்: }
அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சதுரங்கப்பட்டினத்திற்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையே கடலுக்கடியில் சோவியத் குழு ஏதேனும் ஆராய்ச்சியை மேற்கொண்டதா?

(இ) ஆம் எனில் அந்தக் குழு அளித்த பரிந்துரைகள் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) & (இ) ஆம். ரஷ்யக் குழுவினர் சோழ மண்டலக் கடற்கரையில் 1964 செப்டம்பர்

தொடக்கத்திலிருந்து அக்டோபர் முடிய கடலுக்கடியில் ஆராய்ச்சி நடத்தினர். இங்கு மீண்டும் மே 1965-லிருந்து இந்த ஆராய்ச்சி துவங்கும். இதுவரை கிடைத்துள்ள ஆராய்ச்சிக் குறிப்புகள் கணிக்கப்பட்டு வருகின்றன.

திரு. கே. ஏ. மதியழகன்: இதுவரை நமக்குக் கிடைத்த தகவல் படி மேலோட்டமான சில அம்சங்களைத் தெரிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கடலுக்கு அடியில் இருக்கும் எண்ணெ வளத்தைப்பற்றிய விவரம் வந்திருக்கிறது. ஆராய்ச்சி இன்னும் முடியவில்லை. ஆதலால் இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: சதுரங்கப்பட்டினத்திற்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையே என்று சொன்னால், அந்த இடையிலுள்ள எல்லா இடங்களிலும் எண்ணெ கிடைக்கும் என்று அர்த்தமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எண்ணெ எங்கிருக்கிறது என்று தேடிக்கொண்டிருக்கிறோம். இன்னும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதுவரை நடந்த பரிசீலனையில் இருந்து நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையில் ஏதேனும் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பரிசீலனை என்று சொன்னால் பல பரிசீலனைகள் நடந்திருக்கின்றன. அதனால்தான் கடலுக்கு அடியில் இருக்கின்ற பொருள்களைப்பற்றி இன்னும் சரியான முடிவுள் வரவில்லை. திட்டச்சேரி, காரைக்கால் பகுதிகளில் எண்ணெவளம் இருக்கிறதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது எவ்வளவு இருக்கும் அதன் மதிப்பு என்ன என்பதைக் கணக்கிடவில்லை. எண்ணெ வளம் இருக்கிறதென்று புரூஃப்கூட காட்டப்பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: ஆராய்ச்சி செய்கிற சோவியத் குழுவோடு நமது அரசாங்க சம்பந்தமான நிபுணர்கள் யாராவது இருக்கிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கடலுக்கு அடியில் நடக்கிற ஆராய்ச்சியில் நம் நிபுணர்கள் இல்லை. ஆனால் தரைக்கு அடியில் நடக்கிற ஆராய்ச்சியில் நம் அரசாங்க ஜியாலஜிஸ்ட்டுகளும் அடிக்கடி வேண்டிய உதவி செய்து வருகிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கச்சா எண்ணெப் பொருள்கள்கூட எடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். லேபரடரி பரிசீலனை செய்யப்பட்டதா? அதில் என்னென்ன பொருள்கள் எடுக்க முடியும் என்று முடிவு செய்யப்பட்டது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முதலில் அங்கே 'கூழ்' போன்ற ஒரு 'ஸப்ஸ்டென்ஸ்' கிடைக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அதிலிருந்து எண்ணெ கிடைக்கிறதா என்று ஆராய்ச்சி செய்யவேண்டும். முதலில் செய்த ஆராய்ச்சியில் எண்ணெ

3rd March 1965]

இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. எண்ணெ இருந்தால் ரிஃபைனிங் செய்ய வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இதற்கு புதிய பரிசீலனை தேவையில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: பட்டுக்கோட்டையில் நடந்த ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பட்டுக்கோட்டையில் 5000, 6000 அடி சென்றிருக்கிறது. எண்ணெ இருக்கலாம் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது. ஆனால் திட்டச்சேரியில் கிடைத்ததைப் போன்ற ஸப்ஸ்டென்ஸ் கிடைக்கவில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த ஆராய்ச்சி மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடக்கிறதா அல்லது மாநில அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடைபெறுகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது மத்திய அரசாங்கத்தின் ஆராய்ச்சி.

திரு. மீ. கலியாணசுந்தரம்: தரை மட்டத்தில் நடைபெறும் ஆராய்ச்சி நம்முடைய ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களில் நடைபெறுகிறது என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பட்டுக்கோட்டை, பரவக்கோட்டை, திட்டச்சேரி பகுதிகளில் நடந்துகொண்டு இருக்கிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: திட்டச்சேரியிலும், அதன் பக்கத்திலுள்ள கிராமங்களிலும் அமைச்சர் தெரிவித்தபடி எண்ணெ எடுத்து இருக்கிறார்கள். அதற்கு மேல் பகுதியில் எந்தெந்த இடங்களில் எண்ணெ எடுக்க உத்தேசம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதுபற்றி மத்திய அரசாங்கம் விரிவாக ஆராய்ச்சி நடத்தவேண்டும். ஆராய்ச்சி என்றால் 'டெக்னிகல் எக்ஸாமினேஷன்' என்று அர்த்தம். அங்கே 'எக்ஸ்ப்ளோரேஷன்' நடத்த வேண்டுமென்று மத்திய சர்க்கார் முடிவு எடுத்து இருக்கிறார்கள்.

Lumpsum loans to Goldsmiths

* 136 Q.—SRI T. P. ALAGAMUTHU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to grant loans to the goldsmiths in lumpsum instead of granting in piecemeal; and

(b) if so, the details thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir

(b) Does not arise.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, இந்த பொற்கொல்லர்களுக்குத் தரப்படும் கடன் பகுதி, பகுதியாகப் பிரித்துத் தரப்படுகிறது. முதல் பகுதி வாங்கி அவர்கள் அதைக் கொண்டு தொழில் ஆரம்பித்து, மறு பகுதி வாங்குவதற்கு இடையே கால